IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 111 /2013

Deposition of witness for DW2

Name : குருபாலன் (VAO, NAGAL VILLAGE)

Caste : -

Father's Name: பரமசிவம் Calling : -

Village : - Religion : இந்து

Taluk : - Age : 36

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30 day of July, 2018.

Cross Examination

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை நான் எடுத்து வந்துள்ளேன். தனிப்பட்டா எண். 138 யார் பெயரில் உள்ளது என்றால் சந்திரன் பெயரில் உள்ளது. தனிப்பட்ட எண்.138 -ல் என்னென்ன புல எண்கள் உள்ளது என்றால் 8 புல எண்கள் உள்ளது. கூட்டுப்பட்டா எண். 563, அதில் ஒரு புல எண் உள்ளது. அது சின்னப்ப கவுண்டர் மகன் சந்திரன், கோவிந்தராஜ் மனைவி ஈஸ்வரி, முனுசாமி மகன் நைனப்பகவுண்டர் ஆகியோர்கள் பெயர்களில் கூட்டாக உள்ளது. மேற்படி ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களை நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். மேற்படி பட்டா எண் 138 மற்றும் 563 ஆகியவை Ex.X1 (வரிசை 1 முதல் 2 வரை) ஆக குறியீடு செய்யப்படுகிறது. தனிப்பட்டா எண்ணில் என்னென்ன புல எண்கள் வருகிறது என்றால் 152/3ஏ3, 153/1பி2, 153/1இ1, 153/1இ3, 154/13, 154/2ஏ, 154/2பி, 154/3சி அகிய 8 புல எண்களில் வருகிறது. இந்த பதிவேடு எந்த ஆண்டில் தயார் செய்யப்பட்டது என்றால் 1987-ம் ஆண்டு பதிய ஆரம்பித்து 1989-ம் ஆண்டு வரை முடிவுபெற்றது. மேற்படி பட்டா எண்களுக்குரிய அ பதிவேடுகளை நான் கொண்டுவந்துள்ளேன். அ பதிவேட்டில் மேற்படி பட்டா எண்களில் உள்ள புல எண்கள் பட்டாவில் உள்ளவர்கள்

பெயரிலேயே உள்ளது. 2017-2018-க்கான அடங்கல் பதிவேடு கொண்டுவந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். மேற்படி புல எண்களுக்கு தனிப்பட்டாபடி அடங்கலும் சந்திரன் பெயரிலேயே உள்ளது. மேற்படி அடங்கல் பசலி வருடம் 1427 -க்கனா சான்றிட்ட நகல் 4 பக்கங்கள் கொண்டது Ex.X2 ஆக குறியீடு செய்யப்படுகிறத.

மேலும் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.